பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 புரட்டாதி 15 ஜுல்-கஃ 20 இதழ் 232

யாழ்ப்பாணம் புதன்கிழமை 1 - 10 - 80

SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1980-10-1 PERIODICALS DIVISION

## யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகளைத் துரிதகதியில் மேற்கொள்ளுமாறு, வடபிராந்திய திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. சிவதாசன் சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### ✻ யுத்தத்தினால் இருநாடுகளுக்கும் இதுவரை 2,000 கோடி டாலர்சேதம்!

# ஈராக் தலைநகர்மீது மீண்டும் குண்டுவீச்சு!

# ஒருநாள் ஓய்வின்பின் கடும்சமர்

## ராணுவஇலக்கு, எண்ணை நிலையங்கள்மீது குண்டுமாரி

லண்டன், செப். 30

ஈரான்--ஈராக் யுத்தம் நேற்று சற்று ஓய்ந்திருந்தபோதிலும் இன்று மீண்டும் இரு நாட்டுப்படைகளும் உக்கிரமான போரில் ஈடுபட்டன என்றும் இரு நாடுகளையும் சேர்ந்த விமானங்களும் இராணுவ இலக்குகளையும் எண்ணை உற்பத்தி நிலையங்களையும் தாக்கி சேதம் விளைவிக்கத் தொடங்கியுள்ளன என்றும் போர்முனையிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று ஈரானிய ஜெட் விமானங்கள் ஈராக் தலைநகர் பாக்தாத் மீது மீண்டும் தாக்குதல் நடத்தின. பாக்தாத்தின் தென் பகுதி ஒரே புகை மண்டலமாகக் காட்சி தந்தது.

வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் மதிப்பீட்டின்படி இந்த யுத்தத்தினால் இரு தரப்பிலும் இரண்டாயிரம் கோடி டாலருக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இத்தாமதம் ஈராக்—ஈரான்படைகள் யுத்தம்நீடித்து வருவதனால் உலக நாடுகளை எதிர்நோக்கும் எண்ணைத் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கு அமெரிக்காபுதியநடைமுறைத் திட்டம் ஒன்றை தீட்டியுள்ளதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானின் முக்கிய பிரதேசமான ஹவாஸ் நகரை ஈராக் கைப்பற்றுவதைத் தடுப்பதில் ஈரானிய படைகள் தீவிரமாக ஈடுபட்டுவருவதாகதெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானின் முக்கிய எண்ணை உற்பத்திப் பிரதேசங்களில் ஒன்றான குர்திஸ்தான் மாகாணத்திற்குள் ஈராக் துருப்புக்கள் பல மைல் தூரம் ஊடுருவியிருப்பதாக ஈராக் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்மேற்குப் பகுதியில் உள்ள இம்மாகாணத்தில் 3 லட்சம் பேர் வரை உள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## வாசு, அலவி மீது வழக்கு தாக்கல்

### 10-ல் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வன்செயலில் ஈடுபட்டது: பொலிஸாரைத் தாக்கியது தொடர்பாக திரு. வாசுதேவ நாணயக்காரா, ஜனாப் அலவி மௌலானா ஆகியோர் உட்பட பன்னிரண்டுபேர் மீது கொழும்புகோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று வழக்கு தாக்கல் செய்தனர்.

இவ்வருடம் ஆகஸ்ட் 8ம் திகதி பயங்கர ஆயுதங்கள் சட்டத்தின்கீழும் தண்டனைக் கோவைச் சட்டத்தின்கீழும் இவர்கள் குற்றம்புரிந்தனர் என்று வழக்குத் தாக்கலாகியுள்ளது. இவர்கள் மீது மொத்தம் 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பூர்வாங்க விசாரணை இம்மாதம் 10ல் ஆரம்பமாகும்.

## மாவட்ட அபிவிருத்தி சபை: கடும் விவாதத்தின் பின்னர் யாழ். மாநகரசபை வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைகள்சட்டத்தை ஆதரிப்பதென தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை மேற்கொண்ட முடிவை வாழ்த்திவரவேற்பதென காரசாரமானவாதத்தின் பின்னர் நேற்று யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளது.

யாழ். நகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த 5 உறுப்

(8-ம் பக்கம் பார்க்க)

## தாலிக்கொடி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள்வங்கி பிரதேச உதவி முகாமையாளர் திரு. கணேசசுந்தரத்தின் வீட்டிலிருந்து சுமார் 18 தங்கப் பவுண் நிறையுள்ள தாலிக்கொடி திருட்டுப் போயுள்ளதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுண்டிக்குளியிலுள்ள இவரதுவீட்டில், சாமிப்படத்திற்கு அருகில், தாலிக்கொடியை, வைத்திருந்தபோதே இத்திருட்டு நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

## "ஆசிரியர் பற்றாக்குறை நாடுமுழுவதும் நிலவுகிறது"

### கருத்தரங்கில் பிரதி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் சகல தொகுதிகளிலுமே ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடத் பற்றாக்குறை ஆகியன நிலவி வருகிறது" என்று உயர்வகுப்பு அதிபர்கள் மத்தியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய பிரதி கல்வி அமைச்சர் திரு. சமரவீர வீரவன்னி கூறினார்.

மேற்படி கருத்தரங்கு நேற்றுக் காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் யாழ். கல்விக் காரியாலய உயர் அதிகாரிகள், வட்டாரக் கல்வி அதிகாரிகள், உயர் வகுப்புப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதிஅமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"எனது தொகுதியிலும் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடங்கள் இல்லாத குறை ஆகியன நிலவி வருகின்றன.

எனது தொகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களில் உடற்பயிற்சியில் நாட்டம் கொண்ட இருபத்திஐந்து ஆசிரியர்களைத் தெரிவுசெய்து உடற்பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களின் உதவியுடன் சகல பாடசாலைகளிலும் உடற்பயிற்சியளிக்கப்படுகிறது. அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் நிலவி வரும் உடற்பயிற்சி ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்க கல்வி அதிகாரிகள் பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு உடற்பயிற்சியில் ஆர்வமுள்ள ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் சகல பாடசாலைகளிலும் உடற்பயிற்சியை அளிக்கவேண்டும்"

(கொ)

## 60 மாணவருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவுக்கு புதியகல்வியாண்டில் 60 மாணவர்களை மட்டும் அனுமதிப்பதென்று, நேற்றுமுன்தினம் கூடிய செனட்முடிவுசெய்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 6ந் திகதி முதல் 9ந் திகதிவரை, நடைபெறும். இத்தகவலை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி தெரிவித்தார். (கெ)

ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்:

463, காலி வீதி கொழும்பு-3.

தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லஇன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விற்பனைக் குண்டு மில்க்வைற், யாழ்ப்பாணம். 6951

இடம் மாதகல் துண்டில் காடு விஸ்தீரணம் 4 பரப்பு காணி, விபரங்கட்கு18அல்விஸ் டவுன் கெண்டல, வத்தளை. 6950

### தேவை

அச்சக கணக்கு எழுதுவதற்கு முழுநேரக் கணக்குப் பிள்ளை தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6952 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6952

## முக்கிய அறிவித்தல்

2-10-80 காலை 10 மணிக்கு விற்பனைக்கு போடப்பட்டிருந்த, மாவிட்டபுரம் திரு. திருமதி. ஏகாம்பரத்தின் வீட்டு விற்பனவு முழுத்தொகையும் தீர்த்தபடியால் நிற்பாட்டப் பட்டிருக்கிறது என்பதை அறியத் தருகிறேன்.

சி. சங்கரப்பிள்ளை.
ஏல விற்பனையாளர்
தெல்லிப்பழை.
29-9-80. 6947


## ஜனாதிபதி பிறந்ததினம்

(மன்னார்)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் 74-வது பிறந்ததினம் மன்னாரில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும், பள்ளிவாசல்களிலும் விசேட பூசை, ஆராதனை, தொழுகையும் இடம் பெற்றன.

மன்னார் ஆஸ்பத்திரிக் குழுவினால் மன்னார் ஆஸ்பத்திரியில் இருந்த 250 நோயாளிகளுக்கு காலை உணவும் மதிய உணவும் வழங்கப்பட்டன. (ஈ)


### கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தில் அசைவற்ற ஆதனங்களை நிர்வாகஸ்தர் என்றபெயரில் ஒருசிலர் விற்கமுயற்சிக்கிறார்கள். இதன் பொருட்டு பொதுமக்களுக்கு அறியத் தருவது யாதெனில் மேற்படி ஆலயம் பலருக்கு உரிமையானதாகும். எனவே ஒரு சிலர் கையொப்பமிட்டு விற்பது சட்டப்படி செல்லுபடியாகாது.

இப்படிக்கு 6954
பொற்பதி விநாயக ஆலய பங்குதாரர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

ஆசீர்வாதம் மனோகரன், 5ம் வட்டாரம் மண்டைதீவு —வழக்காளி

இல: ஈடு / 497 எதிராக

முத்துத்தம்பி இரத்தினவேல், அளவெட்டி வடக்கு, அளவெட்டி—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/497ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1980ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி (07-10-1980) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 4232ம் மேலும் 8000 - வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15 வீத வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977ம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1977ம் ஆண்டு கார்த்திகை 4ம் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் வழக்குச் செலவு 150/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப்பிரிவு வலிகாமம் வடக்குப் பகுதி அளவெட்டி கோவிற்பற்று, மல்லாகம் இறை 'கொல்லன் புலம்' பர. நில இலாச்சம் (2) இரண்டும் குளி (15) பதினைந்தும் இதற்கு எல்லை கிழக்கு புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு (4) அடி அகலம் கொண்ட ஒழுங்கை வடக்கு ஒழுங்கை மேற்கு சபாபதி சிவக்கொழுந்துவின் ஆதனம் தெற்கு கணபதி சீலன் பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம், தெற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் ஆடுகால் பங்கும்.

க. சிவஸ்கந்தா.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்
நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை, 03-09-80. 6949


### ரியூட்டரி மாணவி கொலைவழக்கு:

# "பஸ்ஸில் ஏறிய கமலம் 'அம்மம்மா நான் போய்விட்டு வாறேன்' என்றார்"

## ரியூசனுக்கு பஸ் ஏற்றிய பேர்த்தியார் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

'கமலம் கொலைசெய்யப்பட்ட தினத்தன்று நான் கமலத்தை ரியூசனுக்குப் போவதற்காக பஸ்தரிப்பில் நின்று பஸ்ஸில் ஏற்றிவிட்டேன். பஸ்ஸில் ஏறியகமலம் 'அம்மம்மா' நான் போய்விட்டு வாறேன்' என்று கூறிச் சென்றார். அன்று கமலம் திரும்பி வீட்டிற்கு வரவில்லை. ஆனால் மறுநாள் கமலம் இறந்துவிட்டாரென அறிந்தோம்.'

இவ்வாறு பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன்கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கமலத்தின் பேத்தியாரான (தாயாரின் தாய்) திருமதி துரைச்சாமி கண்மணிஅம்மா (வயது 70) குறிப்பிட்டார்.

இக்கொலை வழக்குவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. தொடர்ந்து சாட்சியமளித்த கமலத்தின் பேத்தியார் சொன்னதாவது:

'இறந்த கமலம் எனது மகளின் மகள் (பேர்த்தி). நானும் எனது மகள் இராசலட்சுமி அம்மாவும், கமலமும் ஒன்றாகவே பொலிகண்டியில் வசித்து வந்தோம். கமலத்தின் தகப்பனான இராமச்சந்திரன் (ஆசிரியர்) ஆறு வருடங்களுக்குமுன்னர் இறந்துவிட்டார். அதன்பின்னர் எனது மகள் இராசலட்சுமிஅம்மாவுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. அவர் கடந்த தைமாதம் தொடக்கம் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இருக்கிறார். அவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு காலை 6-45 மணிபோல் பஸ்ஸில் சென்றால் பின்பு மாலை 5-30 மணிபோல் வழமையாக வீட்டிக்கு வருவார்.

'கமலத்திற்கு இரண்டு ஆண் சகோதரர்கள் இருக்கின்றார்கள். கமலம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியிலும், ஒரு சகோதரன், புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், மற்றச் சகோதரன் பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையிலும் கல்வி பயின்றுவந்தார்கள். பகலிலே இப்பிள்ளைகளுக்கு வீட்டில் நானே பொறுப்பாக இருந்தேன்.

'கடந்த 21-2-80 அன்று காலை கமலத்தைப் பாடசாலைக்குப் போவதற்காக நானே பஸ்ஸில் ஏற்றிஅனுப்பினேன். அவர் அன்றும் பாடசாலைக்குச் செல்லும்போது வழமையாக அணிந்துசெல்லும் 1 சோடி காப்பையும்' 1 சோடி ஜிப்சியையும் அணிந்து கொண்டே சென்றார். அத்துடன் பாடசாலைக்கான சீருடை (வெள்ளைச்சட்டை) அணிந்துதான் சென்றார்.

'கமலத்திற்கு அன்று மாதவிடாய் தொடர்ந்து இருந்தபடியால் தாய் இராசலட்சுமி அம்மா அன்று கமலத்தை அரை நேரத்துடன் வீட்டிற்கு வருவதற்கு அனுமதிபெறுவதற்கான கடிதம் ஒன்றையும் அதிபருக்குக் கொடுத்திருந்தார்.

'கமலம்அன்றுபகல் இரண்டு மணியளவில் வீட்டிற்கு வந்தார். பின்னர் குளித்து உடுப்புகளையும் கழுவிவிட்டு சாப்பிட்டுவிட்டு ரியூஷனுக்குப் போகப்புறப்பட்டார். நான் பொலிகண்டி பஸ் தரிப்பு நிலையத்தில்வைத்து மூன்றரை மணிபோல் அவரை பஸ்ஸில்ஏற்றிவிட்டேன்.அவர் பருத்தித்துறை மொடேன் கொமேர்ஸ் ரியூட்டரியிலேயே ரியூசன் எடுத்துவந்தார்.அவர் ரியூசனுக்குப் போனபோது நாவல் நிறச்சட்டை ஒன்றே அணிந்த சென்றார். அப்போதும் காப்பு, ஜிப்சி என்பன அணிந்தே சென்றார். நான் பஸ்ஸில் ஏற்றிவிட்டபோது 'அம்மம்மா நான் போய்விட்டு வாறன்' என்றுசொல்லிவிட்டுப் போனார் என்று கூறி விம்மி விம்மி அழுதார். இதனால் விசாரணை சில நிமிடங்களுக்குத் தடைப்பட்டது.

'கமலம் அணிந்திருந்த 1 சோடி காப்பு, 1 சோடி ஜிப்சி, நாவல்நிறச் சட்டை, 1சோடி செருப்பு, லேஞ்சி, பயிற்சிப் புத்தகங்கள், கைப்பை ஆகியன மன்றில் காட்டப்பட்டபோது கண்மணி அம்மா அவைகளை அடையாளம் காட்டினார்.

### கமலத்தைக் காரில் தேடினோம்

'அன்று கமலம் வழமையாக வரும் பஸ்ஸில் ரியூசனால் வரவில்லை. அவர் அனேகமாக 6ரிமலை பஸ்ஸில்தான் வருவது வழக்கம். ஆனால் எட்டேகால் மணிவரை கமலம் வராதபடியால் கார் ஒன்றில் நானும், எனது மகள் இராசலட்சுமி அம்மா, ... தார்களான ... பார்த்திபன் ஆகியோரும் அயலவர்களான சிவலிங்கம், அழகேசு ஆகியோரும்,கார்ச்சாரதி இரத்தினமும் கமலத்தைத் தேடிப் புறப்பட்டோம்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்குச்சென்ற நாங்கள், அங்கு கமலம்இல்லாதபடியால் ரியூட்டரிக்குச்சென்றோம். அது பூட்டப்பட்டிருந்தது. பின்னர் திருமதி பத்மநாதன் வீட்டிற்குச் சென்றோம். அங்கே என்னையும், கமலத்தின் சகோதரர்களையும் இறக்கிவிட்டு, மகள் இராசலட்சுமி அம்மா, சிவலிங்கம், அழகேசு, பத்மநாதன் ஆகியோர் கமலத்தைத்தேடிப் புறப்பட்டார்கள். பின்புவந்த இராசலட்சுமி அம்மா சொன்னார். தாங்கள் கமலத்துடன் கூடச்செல்லும் சில பெண் பிள்ளைகளை விசாரித்தபோது கமலம் வீரப்பனுடன் (1-ம் எதிரி) கதைத்துக் கொண்டு நின்றதாக. அத்துடன் இராசலட்சுமி அம்மா இவன் (1-ம் எதிரி) பிள்ளையை என்ன செய்தான் என்பது தெரியாது என்றும் சொன்னார். பின்பு பத்மநாதன் ஆகியோர் வீரப்பனைக் கூட்டிவந்தார்கள். அப்போது நான் 'பிள்ளை எங்கே' என்று கேட்டேன், அதற்கு அவர் பிள்ளையை 763-ம் இலக்க பஸ்ஸில் ஏற்றிவிட்டதாகச் சொன்னார். அப்போது நான்'751, 763 ஆகிய இலக்க பஸ் எல்லாம் போய்விட்டன. பிள்ளை ஒன்றிலும் வரவில்லை. பிள்ளை எங்கேயடா' என்று உரத்துக் கேட்டபோது 'உங்கள் பிள்ளை காணாமல் போனதற்கு என்னில் ஏன் ஆத்திரப் படுகிறீர்கள் என்று கேட்டான். அதற்கிடையில் அங்கு நின்ற சிலர் எங்களுக்கு இவனோடுசத்தம் போடாதீர்கள் இவனைக்கூட்டிச் சென்று மெதுவாக இரகசியமாகவிடயத்தைக் கேட்போமென்றுகூறி இவனை வெளியே கூட்டிச் சென்று கதைத்துவிட்டுவந்தார்கள்

அதன்பின் கமலத்தைத் தேடி யாழ்ப்பாணம்போக வேண்டுமெனக்கூறி பத்மநாதனும் 1-ம் எதிரியும், இன்னும் சிலரும் நாங்கள் வந்த காரிலே யாழ்ப்பாணம் போனார்கள். பின்பு காலை நாலுமணிபோல் திரும்பிவந்தார்கள், நாங்கள் கமலம் வருகிறார் எனஎண்ணி ஓடிச்சென்றோம், ஆனால் கமலம் வரவில்லை, அப்போதும் 1ம் எதிரியிடம் எங்கேயடா பிள்ளை என்று கேட்டேன், அதற்கு அவன் கமலம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராசேந்திரத்துடன் போய்விட்டதாகக்கூறினான்.

நான் ஏனடா பிள்ளையை இராசேந்திரத்திடம் கொடுத்தாய் என்றுகேட்டதற்கு அவர் விரும்பித்தான் இராசேந்திரத்துடன் போனாள் என்றார் அப்போது நான் உனது தங்கையைக் கொடுத்திருக்கலாமே என்றுகூற என்னுடைய தங்கை விரும்பினால் நான் விடுவேன் என்றும் உங்கள் பிள்ளை விரும்பித்தான் போனவள் என்றும் சொன்னான்.

அப்போதுநான் சொன்னேன் இவனை விடாதீர்கள் பிடித்துப் பொலிசில் பாரம் கொடுக்க வேண்டுமென்று. அப்போது 1ம் எதிரிதான் பொலிசிற்கும் இவைகளைத் தான் சொல்லுவேன் என்று கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து நழுவிட்டான். பின்பு என்னையும், பிள்ளைகளையும் கூட்டிச் சென்று வீட்டில் விட்டு விட்டு இராசலட்சுமிஅம்மா கமலத்தைத்தேடி யாழ்ப்பாணம் போனார்.

நீதவான்:- விரப்பன் உங்களுக்குச் சொந்தமா?- எனது அக்காவின் மகளின் மகன், அதனால் எனக்கும் பேரன் முறை.

நீத:- விரப்பன் பற்றிய விபரங்கள்யாவும் உங்களுக்குத் தெரியுமா?- இவனது தயார் வல்வெட்டித்துறையில் இருக்கின்றார். இவனுடன் நெருங்கிய தொடர்போ கதைப்போ இல்லை.

22 - 2 - 80 அன்று காலை பத்தரைமணிபோல் கமலம் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டோம். பின்புபோய் நாங்கள் பிரேதத்தைப் பார்த்தோம். அப்போது கமலத்தின் பிரேதத்தில் நாவல்நிறச்சட்டையே இருந்தது. நகைகள் ஒன்றும் இருக்கவில்லை. இங்குநான் அடையாளம் காட்டிய சான்றுப் பொருட்கள் பிரேதத்திற்கு அருகாமையில் சிதறிக் கிடந்தன.

பின்பு சில நாட்களின்பின் பொலிஸ் நிலையத்தில் காப்பு ஒரு சோடி, ஜிப்சி ஒரு சோடி என்பனவற்றை அடையாளம் காட்டினேன். புகைப்படம் காட்டப்படுகின்றது. இது கமலம் புஸ்பவதியாகியபோது அந்த வைபவத்தில் எடுத்த புகைப்படம் என்றுகூறி அடையாளம் காட்டியதுடன் சாட்சி வீரிட்டுக் கதறி அழுதார்.

இதனால் விசாரணை சில நிமிடங்குக்கு ஒத்திப் போடப்பட்டது.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

சட்; உங்கள் பேத்தி கடந்த மாசிமாதம் 20ம் திகதி மத்தியானத்துடன் பாடசாலையால் வந்தார்?- ஆம், அன்றுதான் அவருக்கு மாதவிடாய் எற்பட்டது. எனவேதான் பாடசாலையால் அரைநேரத்துடன் வந்தார்.

சட்:- அன்று ரியூட்டறிக்குப் போகவில்லை?- ஆம்.

சட்;-நீதிமன்றத்தில்]இங்கு) நீங்கள் 1ம் எதிரியைக் கேட்டதாக விபரமாகச் சொன்னவைகளை நீங்கள் பொலிசிற்குச் சொல்ல வில்லை?- 21-2-80 இரவு திருமதி பத்மநாதன் வீட்டில் வைத்து இவைகள் யாவும் நடந்தன. பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தபோது பொலிசார் எனதுமகள் இராசலட்சுமி அம்மாஎல்லாம் விபரமாகச் சொல்யிருக்கிறபடியால் நான் விபரமாகக் கூறத்தேவையில்லை என்று சொன்னார்கள்.

சட்:- அன்றிரவு 1ம் எதிரியுடன் நீங்கள் ஒன்றுமேகதைக்கவில்லையென நான் 1ம் எதிரி சார்பில் கூறுகிறேன்? இல்லை, இங்கு கூறியவைகள் யாவும் அன்று கேட்டேன்.

சட்:- மீண்டும்நான் சொல்கிறேன். நங்கள் இன்று மன்

(5-ம் பக்கம் பார்க்க)

## செண். பற்றிக்ஸில் நாளை நினைவாஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பேரறிஞர் வண. பிதா தனிநாயகம் அடிகளாரின் நினைவாஞ்சலிக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை திவ்ய பூசைப்பலியுடன் ஆரம்பமாகும். கலாநிதி அ. சண்முகதாஸ், வண. சின்னராசா அடிகளார், ஆசிரியர் யோசப், செல்வன் எட்வேட் ஆகியோர் உரையாற்றுவார்கள். (க-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் - ஈரான் போர்முனைகளில் மந்தநிலை:

## பல பகுதிகளைக் கைப்பற்றியதாக இருநாடுகளும் பரஸ்பரம் பெருமிதம்

லண்டன், செப். 30

ஈராக்-ஈரான் யுத்தத்தில் இரு நாடுகளும் தமது படைகள் பரஸ்பரம் பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளதாகத் தொடர்ந்தும் கூறிவரும் அதேவேளையில் கடந்த 24 மணித்தியாலமாக யுத்தம் மந்தமான நிலையில் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தை நிறுத்துமாறு சர்வதேச ரீதியில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதற்கான பூர்வாங்க யுத்தநிறுத்தமே இது என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### ★ ஈரானிய ராடர் நிலையம், விமானத்தளத்தை ஈராக் படைகள் கைப்பற்றின

ஈரானுக்குள் பல இடங்களில் புகுந்துள்ள ஈராக் படைகள் புதிதாக பல ஈரானியப் பிரதேசங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதி ஒன்றில் ராடர் நிலையம் ஒன்றையும் விமானத் தளம் ஒன்றையும் ஈராக் படைகள் கைப்பற்றியுள்ளதாக ஈராக் இராணுவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### ★ ஈரான் மறுப்பு

ஈராக்கின் இச்செய்திக்கு ஈரான் மறுப்புத் தெரிவித்துள்ளது. ஈராக்குக்குள் பல இராணுவ இலக்குகள் மீதும், எண்ணெய்த்தாங்கிகள் மீதும் ஈரானியப் படைகள் தாக்கி சேதப்படுத்தின என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

### ★ ஈரானிய கடற்படையின் மகத்தான வெற்றி

ஈராக்கின் முக்கிய நகர் ஒன்றின் மீது திடீர்த்தாக்குதல் ஒன்றை நடத்திய ஈரானிய கடற்படைகள் மாபெரும் வெற்றி ஒன்றைச் சாதித்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ★ அமெரிக்கா ஆட்சேபம்

இதேவேளையில், இப்போர் விவகாரத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் நடுநிலைமையை மேற்கொண்டுவருவதை உறுதிப்படுத்தும் அதேசமயம் படைபலம் மூலம் பிரதேசங்களைக் கைப்பற்றுவதை அது ஆட்சேபிக்கிறது என்று அமெரிக்கவெளியுறவுஅமைச்சு தெரிவித்தது. (இ)

### இளைஞர் பலி

[யாழ்ப்பாணம்]

ஊறணியில் நடந்த ஜீப் விபத்தொன்றில் இ. ஜோ. ஜெகநாதன் என்ற இளைஞர் பலியானார். ஜீப் சாரதியான திசவீர என்பவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (க)

### "உட்கட்சிப் பூசலால் ஜனதா அரசுமீது மக்கள் கோபம் கொண்டுள்ளனர்"

மதுரை, செப். 30

உட்கட்சிப்பூசலால்நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் நிறுத்தப்பட்டதால் ஜனதா அரசுமீது மக்கள் கோபமுற்றிருந்தனர் என்பதைக் கடந்த லோகசபைத் தேர்தல் எடுத்துக்காட்டியுள்ளது.

இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மதுரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

கடந்த லோகசபைத் தேர்தலில் மக்கள் தங்கள் ஜனநாயக உணர்வுகளைத் தெளிவாகக் காட்டியுள்ளனர். இதனால் நாடு வலுப்பெற்றுவருகிறதென்பதை அறியமுடிகிறது என்றும் திரு. தேசாய் கூறினார். (இ)

ஐ. நா. பாதுகாப்புச்சபையின்

## யுத்தநிறுத்த கோரிக்கைக்கு ஈராக் இணக்கம்

### வால்ட்ஹெய்முக்கு ஹுசெய்ன் கடிதம்

பாக்தாத், செப். 30

ஈராக்-ஈரான் யுத்தத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விடுத்த வேண்டுகோளை ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக ஈராக் அதிபர் ஜனப் சதாம் ஹுசெய்ன் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்முக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

யுத்தநிறுத்தத்துக்கு ஈரான் இணங்குமானால் ஈராக்கும் அதற்குத் தயாராயிருக்கிறது என்று ஜனப் ஹுசெய்ன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபையின் இத்தீர்மானம் குறித்து ஈரான் இதுவரை எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. (இ)

ஈரான் - ஈராக் யுத்தத்தில்

## அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகுறித்து ஆலோசனை

### அவசர மகாநாடு கூட்டினார் கார்ட்டர்

வாஷிடன், செப். 30

ஈராக்-ஈரான் யுத்தத்தில் அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் அவசர மகாநாடொன்றை நடத்தினார்.

இதுகுறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் விரைவில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டது.

பாரசீக வளைகுடாவிலிருந்து அபிவிருத்தியடைந்த கைத்தொழில், ஜனநாயக நாடுகளுக்கு எண்ணெயை எடுத்துச் செல்லும் மார்க்கமான 'போர்மோஸ்' கடற்பிரதேசத்தைப் பாதுகாக்க அப்பிரதேசத்தில் அமெரிக்கக் கடற்படையின் யுத்தக்கப்பல்களைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டுமென ஜனாதிபதி திரு. கார்ட்டர் இம்மாநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ளதாக கொலம்பியா செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் இராணுவப் பாதுகாப்பை அதிகரிக்க அமெரிக்கா அதிக உதவி வழங்குவது அவசியம் என்ற கார்ட்டர், நிர்வாகத்தின் கொள்கைக்கு ஆதரவு திரட்டவே மேற்படி மகாநாட்டை திரு. கார்ட்டர் கூட்டியதாகவும் அச்செய்திச் சேவை தெரிவித்தது. (இ)

### இந். ஜனாதிபதிக்கு மாஸ்கோவில் அமோக வரவேற்பு

மாஸ்கோ, செப் 30.

இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சிவரெட்டி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று மாஸ்கோ விமான நிலையம் வந்திறங்கியபோது அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. ரெட்டி இன்று சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவுடன் ஈராக்—ஈரான் பிரச்னை உட்பட பலசர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருதரப்பு உறவு குறித்தும் பேச்சு நடத்துவார் எனதெரிவிக்கப்பட்டது. (இ)

### பாக். குற்றச்சாட்டுக்கு ஆப்கானிஸ்தான் மறுப்பு

காபூல், செப். 30

பாகிஸ்தான் எல்லைக்குள் ஆப்கானிஸ்தான் ஹெலிகொப்டர்கள் அத்துமீறிப் பிரவேசித்ததாக பாகிஸ்தான் அரசு சுமத்திய இக்குற்றச்சாட்டை ஆப்கானிஸ்தான் மறுத்துள்ளது.

ஆப்கான் படைகள் பாகிஸ்தான் நிலத்திலோ, ஆகாயத்திலோ அத்துமீறிப்பிரவேசிக்கவில்லை என்று காபூல் வானொலி அறிந்தது.

கடந்த வெள்ளியன்று பாகிஸ்தான் எல்லைக்குள் 'எம் ஐ.' பீரங்கி பொருத்தப்பட்ட ஆப்கானிஸ்தான் ஹெலிகொப்டர் பிரவேசித்தபோது ஏற்பட்ட மோதலில் 3 பாக். வீரர் கொல்லப்பட்டதாகவும் அத்துமீறிய ஹெலிகொப்டர் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் பாகிஸ்தான் தெரிவித்திருந்தது. (இ)

### அபிவிருத்திச் சபை

(மன்னார்)

முருங்கன் மகா வித்தியாலய அபிவிருத்தி சபைக் கூட்டம் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வேதநாயகம் (அதிபர்), உப தலைவர்கள்: எம். ஏ. சுல்தான், எஸ். அரசரத்தினம், செயலாளர் பி. பி. அந்தோனிப்பிள்ளை, துணைச்செயலாளர் எஸ். செபமாலை, பொருளாளர்: குகதாசன் (க)

### இந்து சமுத்திரப் பகுதிக்கு பிரி. நாசகாரி

லண்டன் செப். 30

பிரிட்டன் ஏவுகணை நாசகாரி கப்பல் ஒன்றையும் ஆதாரவுக் கப்பல்களையும் பிரிட்டன் இந்து சமுத்திரப் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

இதற்கான காரணம் பற்றி பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சு எதுவும் கூற மறுத்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### மழைக்கு ஒதுங்கிய 3 பெண்கள் பலி

மதுரை, செப். 30

கட்டிட வேலைநடைபெற்றுக் கொண்டிருந்த ஓரிடத்தில் மழைக்கு ஒதுங்கிய 40 பெண் தொழிலாளர்களில் மூவர் அக்கட்டிடம் இடிந்து விழுந்து பலியானார்கள். (இ)

### நீர்ப்பாசனத் திட்டம்

(மன்னார்)

துரிதமாக நடைபெற்று வரும் விடத்தல்தீவு, வெளிமருதமடு நீர்ப்பாசனத் திட்ட வேலைகளுக்கு சுமார் 25 லட்சம் ரூபா செலவிடப்படவிருக்கிறது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் மூதூர் எம். பி.யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனப் எம். ஈ. எச். மஹ்றூப் முயற்சி எடுத்து வருகிறார். (ஈ)

வடபகுதி மதுறுஓயா

### சிரமதானிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மதுறுஓயாவில் சிரமதானப் பணிகளை மேற்கொண்ட யாழ் மாவட்ட இளைஞர்களுக்கு இம்மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சான்றிதழ்கள் வழங்கப் படவிருக்கின்றன.

யாழ் திறந்தவெளியரங்கில் வடபகுதி ஐ. தே. கட்சியினரால் காணி காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவுக்கு அளிக்கப்படும் வரவேற்புக் கூட்டத்திலேயே காணி அமைச்சரால் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நான் உனக்கு உரைப்பதிலே ஒருவீசம்பங்கையேனும் நீ அனுஷ்டானம் பண்ணுவாயானால் நீ முக்தியுறுவது நிச்சயம் என்பேன்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

## யாழ். நகரில் பொறியியல் சேவை நிலையம்

**யாழ்.** மாவட்டத்தின் இரகநிலை சாதகமானமாற்றமடையும் அறிகுறி இருப்பது போல் தெரிகின்றது.

உலக வங்கி பத்துலட்சம் ரூபா செலவில் பொறியியல் பொதுச் சேவை நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகச் செய்தி.

இவ்வித உதவிக்கு கடும் நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. இதனைஅமைப்பதற்கான காணியை வருகிற நவம்பர் மாதத்துக்கு முன் வழங்காவிட்டால் இந்நிலையம் குருநாகல் அல்லது கண்டி மாவட்டத்துக்கு மாற்றம் செய்யப்படக் கூடும்.

உலகவங்கி யாழ்.மாவட்டத்தில் கருணை கொண்டது மிகவும்வரவேற்கப்பட வேண்டிய விடயம். உலக நாடுகளோடு தொடர்பு கொண்டு அவைகளின் அவசிய தேவையை அலசி ஆராயும் இப்பெரிய பொருளாதார ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தின் அவசிய தேவையைக் கண்டு பிடித்தது ஒருவித அதிசயமான செயல். அதே சமயம் இக்கடின நிபந்தனை ஒருவித பயமுறுத்தல் போலத் தெரிகின்றது. உண்மையில் பத்துலட்சம் ரூபாய் கொண்ட ஒரு கொடை உலக வங்கியின் உதவிப்பட்டியலில் ஒருசிறு துளியெனலாம். எனவே இந்த நிலையத்தை அமைப்பதற்குரிய நிலத்தைப்பெறுவதற்குரிய அவகாசம் ஒரு மாதத்திற்குள் முடிவடையும் நிபந்தனையாகவிருப்பது விரும்பத்தக்கதன்று. வேண்டாவெறுப்பாகஅளிக்கும் உதவியெனப் பொது மக்கள் கருத இடமுண்டு.

ஆயினும் இம்மாவட்ட மக்கள் இந்தச் சவாலைஏற்று இவ்வவசிய கொடையை உருவாக்க காணியைத்தக்க இடத்தில் பெறுவதற்கு முன்வரவேண்டும்.

எமது குடாநாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் நாம் பலவகைகளிலும் தயங்கி இருப்பது கண்கூடு. மாபெரும் அரசியல்பிரச்னைகளை எழுப்பவோ, அவற்றைப் பயன்படுத்தி தனிப்பட்ட அரசியல், பொருளாதார சமுதாயநலத்தைப் பெறவோ நாம் என்றும் பின்னிற்பதில்லை. எனவே இந்தச் சவால் எங்கள் பொதுநலஉணர்வைப் பரிசோதிக்கும் விடயமாகின்றது.

நல்லகாலம் இது பற்றிக் கடைசியாகக் கிடைத்த தகவல், இம் மாவட்டத்தின் பொறியியல் அபிவிருத்திக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் காணப்படுகின்றது. யாழ். அரசாங்க அதிபர் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் வேண்டிய நிலத்தை வேண்டிய இடத்தில் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறதாகவும், அதன் பயனால் யாழ்ப்பாண புகையிரதநிலையக் களஞ்சியசாலைக்கருகிலுள்ள இரண்டேகால் பரப்பு நிலத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ள கைத்தொழில் அபிவிருத்திச்சபை பிராந்திய அதிபரைக் கேட்டுள்ளதாகச் செய்தி கூறுகிறது.

இது கைகூடுமென நாம் நம்புகிறோம். வேலையில்லாமைக்கு அவசியமான தொழில்நுட்ப அபிவிருத்திக்கு இந்நிலையம் ஒருவரப்பிரசாதமென்பதில் ஐயமில்லை. போதியநிலப்பரப்பு விஸ்தாரமற்றதாகிலும், மேல்மாடிக் கட்டடங்கள் கொண்டதாக, சக்திவாய்ந்த இயந்திரங்கள் திறமையாகத் தொழிற்படும்முறையில் அமைக்கப்படுமாயின், தொழில் நுட்பத்துறையில் இன்றும் பின்தங்கிய நிலையில் தள்ளப்பட்டிருக்கும் குடாநாடு முன்னேற்றமடைய பிறக்கும்.

# நவீனசோஷலிஸபாதையில் முன்னேறிவரும் சீனு

[இன்று நவசீனத்தின் தேசியதினம். இதனை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது]

**1949-ம்** ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி மக்கள் சீனக் குடியரசு உலகின் முன் பிரகடனப்படுத்தப்பட்டது. பல நூறு வருடங்களாக அடிமைத்தனத்தாலும், சுரண்டலாலும் கொடுமைப்படுத்தப்பட்ட சீன மக்கள் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட காலப் புரட்சிப் போராட்டத்தின்மூலம் தமது துயர் நிறைந்த வாழ்வுக்கு முடிவு கட்டினர். சீனப் புரட்சியும் அதன் வெற்றியும் மாபெரும் அக்டோபர் சோஷலிஷப் புரட்சிக்குப்பின், இரண்டாவது உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்த ஆண்டுகளுக்குப் பின் உலக முக்கியத்துவம் பெற்ற சம்பவமாக சரித்திரத்தில் இடம் பெற்றுக்கொண்டது.

### பொருளாதார முன்னேற்றம்

விடுதலை பெற்ற சீன மக்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் உருவாக்கிய தமது சோஷலிச நிர்மாணத்தின் மூலம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளனர். சீனாவின் சனத்தொகை கிட்டத்தட்ட நூறு கோடியாகியுள்ளது. உலகிலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட தேசமான சீனம், உலகில் பெரும்பாலான நாடுகள் இன்று எதிர் நோக்கியுள்ள, பணவீக்கம், வேலை இன்மை, விலைவாசி உயர்வு போன்றவற்றை வெற்றிகரமாக முறியடித்து முன்னேறும் தேசமாகத் திகழ்கின்றது. அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரத்துறைகளில் திட்டமிட்ட சோஷலிச நடவடிக்கைகள்மூலம் சீன மக்கள் தமது கட்சியினதும், அரசினதும் சிறந்த வழிகாட்டலின் கீழ் முன்னேறிவருகின்றனர்.

சீன தேசத்திற்கு எதிராகவும் அவர்களது சோஷலிச நிர்மாணத்திற்கு எதிராகவும் காலத்திற்குக் காலம் எதிர்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளன. இன்றும் அதன் தொடர்ச்சி புதிய பெயர்களில் மேற்கொள்ளப்படுகின்றன. சீனாவில் ஜனநாயகம் இல்லை, சுதந்திரம் இல்லை, சட்டம் இல்லை, மதம் அழிக்கப்பட்டுள்ளது. மக்கள் வாட்டி வதைக்கப்படுகின்றனர் என்றெல்லாம் உலகரீதியாகப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய பிரசாரங்கள் சீன மக்களின் சோஷலிசப் பயணத்தை ஊறு செய்யமுடியாத வெறும் புலம்பல்கள் என்பதை சீனாவின் சோஷலிச நிர்மாணத்தின் வெற்றிகள் ஏற்கனவே உறுதிப்படுத்திவிட்டன.

### நவீன சோஷலிச நாடாக...

ஆனால் இன்று, சீனாவிற்கும் அதன் சோஷலிச நவீனமயமாக்கலுக்கும் எதிரான பிரசாரம் புதிய விதத்தில் கிளப்பப்படுகின்றது. தலைவர் மாஓவின் இறப்புக்குப்பின் சீனாவின் பாதை திசைமாறிவிட்டது என்றும், இது முதலாளித்துவத்தை சீனாவில் நிலைநாட்டப் போகின்றது என்றும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சீனாவில் இன்று சகல துறைகளிலும் துரித மாற்றங்களும், வளர்ச்சியும் நடைபெறவே செய்கின்றன. இது மாசேதுங் அவர்களது கொள்கைகளுக்கும் வழிகாட்டலுக்கும் உட்பட்டதேயாகும். மாசேதுங் அவர்கள் உயிருடனும், நல்ல சுகதேகத்துடனும் இருந்த வேளை கட்சியும், அரசும் இந்த நூற்றாண்டின் முடிவில் சீனாவை சக்தி மிக்க நவீன சோஷலிச நாடாக உலகின் முன்னிலையில் கொண்டுவருவது என்ற முடிவை மேற்கொண்டனர். அதை இன்று சீனக் கட்சியும் - அரசும் மிகவும் வேகத்துடன் முன்னெடுத்துவருகின்றனர். நான்கு துறைகளில் விவசாயம், கைத்தொழில், பாதுகாப்பு, விஞ்ஞானம் - தொழில் நுட்பம் என்பனவற்றில் நவீனமயப்படுத்தும் திட்டங்களை விரிவுபடுத்தி வரு

(5-ம் பக்கம் பார்க்க)

— ந. இரவீந்திரன் —
(இணைச்செயலாளர் இலங்கை -- சீன நட்புறவுச்சங்க யாழ். கிளை)

## மக்கள் கருத்து

### யாழ். மாநகரசபை துயர் துடைக்குமா?

ஈழநாடு 25-09-80, 29-09-80 திகதி இதழ்களில் "ஆறுகால் மடம்பற்றி வெளியான மக்கள் கருத்தைக் கண்ணுற்றேன். ஆறுகால்மடம் தனக்கெனத் தனியானதொருவரலாற்றைக் கொண்டதாகும். இதன் வரலாறு மூன்று நூற்றூண்டுகட்கு மேலானது.

பெரிய பிரித்தானியா போன்ற மேலை நாடுகளில் பழம்பெருமைமிக்க கட்டிடங்களை அதன் தனித்துவம் சிறிதும் கெடாதநிலையில் காப்பாற்றுவதற்காக அந்நாட்டு அரசுகள் பெரும் பணத்தைச் செலவுசெய்துவருகின்றன. இந்நிலையில் யாருக்கும் இடர் விளைவிக்காதநிலையில் ஒதுங்கி நின்று தன் பாரம்பரியத்துடன் மக்களுக்கு தன் பணி ஆற்றிவரும் ஆறுகால்மடம் அப்பகுதி மக்களுக்கு என்ன கொடுமையைச் செய்துவிட்டது என்பது எமக்குப் புரியவில்லை.

பஸ்தரிப்புநிலையம் அமைப்பதற்கு ஆறுகால்மடம் தடையாக இருந்ததாக 29-09-80 ஈழநாடு மக்கள்கருத்தில் கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்கானை நோக்கிச் செல்வதற்கு அவ்விடத்தில் மக்கள் பஸ்ஸிற்கு தொகையாகக் கூடுவதில்லை. ஆகவே 'கியூ' வரிசையுடன் கூடிய பஸ்தரிப்புநிலையம் அவ்விடத்தில் அவசியம் இல்லை. ஆகவே ஆறுகால் மடமே பஸ்தரிப்புநிலையமாகவும் அமைகின்றது. நவீன பஸ்தரிப்புநிலையங்களைவிட ஆறுகால்மடம் வசதியும் குளிர்ச்சியும் நிறைந்ததென்பதை யார்தான் மறுப்பர்.

வாசிகசாலையின் வளர்ச்சிக்கு ஆறுகால்மடம் தடையாக இருப்பதாகவும் ஒரு கருத்து கூறப்பட்டுள்ளது. இது உண்மையெனில் வாசிகசாலையைச் சுற்றிஇருக்கும் ஆறு குடும்பங்களையும் பிறிதொரு குடியேற்றத்திட்டத்திற்கு இடமாற்றம்செய்வது இருபாலார்க்கும் சேமமானதாகும். ஆறுகால் மடமும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பும், தர்மச்சொத்துக்கள் என்பதை நாம் நினைவில் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

ஆறுகால்மடத்தை அழிக்க முற்பட்ட முயற்சியைப்பற்றி ஆனைக்கோட்டை மக்கள் கவலைப்படுவது மட்டுமல்ல அயல் ஊரவர்களின் பழிச்சொல்லுக்கும் இலக்காகியுள்ளார்கள். ஆறுகால்மடத்தின் அருமையை ... அயலவர் மக்கள் குறிப்பாக வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் வாழும் வசதியற்றவர்கள் ஆறுகால் மடத்தின் அருமையை அனுபவித்துவந்தவர்கள்.

ஆனைக்கோட்டைமக்களுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தை துடைக்க யாழ் மாநகரசபையினர் உடன் ஆவனசெய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

க. சு. லிங்கம்.

## இன்று செல்லையா சுவாமிகளின் நினைவுதினம்

**ம**னிதருள் மாணிக்கமாகத் திகழும் சிலருள் சிறந்த ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட துறவு வாழ்க்கை வாழ்ந்த அம்பலவாணனர் செல்லையா [சுவாமிகளின் வாழ்வு, ஓர் எடுத்துக் காட்டாகும்.

தென் புலோலியூரை பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் அம்பலவாணர் செல்லையா ஒரு சிறந்த சோதிடராகவும் துறவியாகவும் வல்லிபுரக் கோவில் தெற்கு வீதியிலமைந்துள்ள மடத்திலிருந்து சிறந்த தொண்டாற்றினார். பசித்தவர் குறிப்பறிந்து அவர்களை ஆதரித்து உணவு வழங்கினார்.

வல்லிபுரக் கோவிலில் கிருஷ்ண ஜெயந்தியை சென்ற ஏழு ஆண்டுகளாக செய்து வரும் பொலிகண்டி ஊரைச் சேர்ந்தவர்களுக்கு, ஆலோசனை கூறி, இவ் விழா சிறப்புடன் திகழ வழியமைத்தார்.

சுவாமிகள் இறைவனடி சேர்ந்த முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று புதன் கிழமை ஆகும். சுவாமிகள் வாழ்ந்து வந்த வல்லிபுரக் கோவில் தெற்கு மடத்தில் இன்று பூசையும் பிரார்த்தனையும், அன்னதானமும் வழங்கப்படவிருக்கிறது.

— ஓர் அன்ப[ர்]

## நாடும் நடப்பும்

பத்திரிகைத் தாளின் விலை திடீர் திடீரென அதிகரித்து வருகிறது. சில தினங்களுக்கு முன் ஒரு றீம் பத்திரிகைத் தாள் நூற்றி எண்பது ரூபாயாக இருந்தது. கடந்த வாரம் இதன் விலை இருநூற்றி இருபத்தைந்தாக உயர்ந்துவிட்டது. போக்குவரத்துச் செலவும் நாளுக்கு நாள அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பத்திரிகைகளின் விலைகளை அதிகரிப்பதைத்தவிர வேறு வழியில்லை.

'ஈழநாடு' பத்திரிகையின் விலையை பிரதி ஒன்றுக்கு இன்று முதல் பத்து சதத்தால் மட்டும் கூட்டியிருக்கிறோம். இன்று முதல் 'ஈழநாடு' தினப் பதிப்பின் விலை 60 சதம்; வார மலர் 70 சதம்!

இதர பத்திரிகைகளின் விலை உயர்வுகளுடன் ஒப்பிடுகையில் இத்தொகை மிகக் குறைவு தான்!

0 0 0

பருத்தித்துறைப் பகுதியில் இருந்து நமது புலோலி நிருபர் அனுப்பிய நெஞ்சை உருக்கும் செய்தியொன்று வேறு இடத்தில் வெளியாகியிருக்கிறது.

சுருட்டுத் தொழிலாளியான இளைஞர் ஒருவர் தமது தங்கைக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு சகல ஒழுங்குகளையும் செய்திருந்தார். ஐயாயிரம் ரூபாய் சீதனம் கொடுக்கவும் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் ஐயாயிரம் ரூபாயைப் பெறுவதற்கு அவர் படாத பாடு பட்டும் பாழாய்ப்போன அந்தப் பணம் அவர் கைக்குக் கிட்டவில்லை.

இதனால் மனமுடைந்த அவர் தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை செய்துகொண்டதால் தங்கையின் திருமணப் பிரச்னை தீர்ந்துவிடுமா? இன்னும் பல புதிய பிரச்னைகளல்லவா தலையெடுக்கும்?.

இதைப்பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு அவருக்கு அவகாசம் இருந்திருக்குமா?

வாக்குக் கொடுத்தபடி ஐயாயிரம் ரூபாய் சீதனத்தையும் கொடுக்க முடியவில்லையே என்பது தான் அவரது ஒரே கவலையாக இருந்திருக்கவேண்டும்! மாப்பிள்ளை வீட்டார் சீதனத்தை வற்புறுத்தினார்களா என்பது சரியாகத் தெரியவில்லை.

ஆனாலும் சீதனப் பிரச்னையால் எத்தனை உள்ளங்கள் வேதனையால் வெடித்துக் கொண்டிருக்கின்றன; எத்தனை குடும்பங்கள் சிதறுண்டு போயிருக்கின்றன; எத்தனை உயிர்கள் அநியாயமாகப் பலியாகின்றன?

சீதன ஒழிப்புக்கு இனியும் காலம் தாழ்த்தக் கூடாது. தலைவர்கள் தமது காலத்தில் சீதனம் வாங்கியிருக்கலாம். அதற்காகத் தமது பிள்ளைகளுக்கும் சீதனத்தைச் சேமித்து வைப்பதும் இளம் சந்ததியினருக்கும் சீதன வழக்கத்தை விட்டுவைப்பதும் முறையல்ல!

சமுதாயத்தில் சமத்துவமும் சமதர்மமும் நிலவவேண்டுமானால் முதலில் சீதன முறையை ஒழித்துக்கட்ட வேண்டியது அவசியமாகும்.

— ஊர்சுற்றி

## இலவச பால்மா

(நெல்லியடி)

கரிக்கட்டுமூலை — முள்ளிவாய்க்கால் கிராமசபைப் பிரதேசத்தில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு பிரதி மாதமும் 5 றுத்தல் பால்மா இலவசமாக வழங்கப்படவுள்ளது. இக் கிராம சபையின் விசேஷ ஆணையாளர் திரு. கே. தேவசிகாமணி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "மாணவரிடையே புதியசிந்தனையை உருவாக்கியவர்சிவகுமாரன்"

## எதிர்க்கட்சித்தலைவர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

1970ம் ஆண்டுதரப்படுத்தல் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அன்றுமாணவனாகஇருந்த தம்பி சிவகுமாரன் மாணவர்களுக்குத் தலைமைதாங்கி அரசுக்கு எதிரான மாணவர் போராட்டம் ஒன்றை நடத்தினார். அதன் மூலம் மாணவர் மத்தியில் ஒரு புதிய சிந்தனையை உண்டாக்கியடதுன் புதிய அத்தியாயத்தையும் உண்டாக்கியவர் தம்பி சிவகுமாரன்

உரும்பராய் சந்தியில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட தியாகி சிவகுமாரனின் சிலை நிறுவப்பட்ட முன்றலில் நடைபெற்ற சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற. இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தம்பி சிவகுமாரன், சக்தியசீலன் போன்றோரால் 70ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாணவர் போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது. தம்பி சிவகுமாரனின் தியாகமும் துணிவும்தான் மாணவர் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியது.

வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவதும் அதற்குத் தலைவணங்குவதும் தமிழினத்தின் மரபு. அதனால்தான் வீரன் சிவகுமாரனுக்குத் தலைவணங்குகிறோம்.

வீரத்துக்கும், தியாகத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய சிவருமாரனுக்குச் சிலை எடுப்பதில் நாம் பெருமையடைகிறோம். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பே சிவகுமாரனின் தமிழ் உணர்வையும், துணிவையும் அறிந்தவன் நான். அன்று கோண்டாவிலில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் என்னைச் சந்தித்த சிவகுமாரன் அகிம்சை வழியைக் காட்டிலும் பலாத்கார மூலம் நாம் எமது லட்சியத்தை அடையமுடியும் என்றுகூறினார்.

அன்று அவருடைய உள்ளத்தில் முளைவிட்டெழுந் எண்ணம் படிப்படியாகா வளர்ச்சியடைந்து சிறிது காலத்தல் தனது லட்சியத்திற்காகத் தன்னையே அழித்துக் கொண்டார்.

யாழ். மாவட்டத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட எண்ணிய ஜனாதிபதி இங்கு பயங்கரவாதச் சட்டத்தை அமுல் படுத்தினார். வடபகுதியிலுள்ள பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்ட உதவி செய்யும்படி எம்மிடம் வேண்டுகோள் விடுத்தார். வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்தியாவில் மகாத்மா காந்தி சாத்வீகப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்த வேளையில் பாஞ்சாலத்தில் வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தினால் நடாத்தப்பட்ட படுகொலைகளினால் கொதித்தெழுந்த பாஞ்சால மக்கள் வன்செயலில் ஈடுபட்டனர். இளைஞன் பகவத்சிங் அந்த இளைஞர் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி வன்செயல் போராட்டத்தை நடத்தினார். வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தால் பகவத்சிங்கிற்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின்நம்பிக்கைக்குப் பாத்திரமான அகிம்சைவாதி ஜவகர்லால் நேரு, பயங்கரவாதியான பகவத்சிங்கிற்கு மன்னிப்பு வழங்கவேண்டுமென வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தைக் கேட்டுக்கொண்டார். அப்படியிருக்க நாம் மட்டும் எவ்வாறு தமிழ் இளைஞர்களைக் காட்டிக்கொடுக்க முடியும் என ஜனாதிபதியைக் கேட்டேன். கூட்டணியினர் அகிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்காகத் தமிழ்ஈழவிடுதலைக்காகப் போராடும் ஏனைய தமிழ் இளைஞர்களை நாம் காட்டிக்கொடுக்கத்தயாராகஇல்லை. அதற்குமாறாக அவர்களின் வீரத்தை நாம் போற்றுகிறோம்.



'சுதந்திரம் என்பது பலரின் தியாகத்தின் பேரில் தான் கிடைக்கமுடியும் அதற்காக தமிழினம்தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான். அதையே தான் சிவகுமாரனும் செய்துகாட்டினார். அவரது வீர வரலாறு வருங்கால எமது சந்ததிக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும்

வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். ஞானமூர்த்தி பேசுகையில் கூறியதாவது, 'கச்சேரிவாசல் சத்தியாக்கிரகத்தின் போது தான் நான் முதன்முதலாக தம்பி சிவகுமாரனைச் சந்தித்தேன். மாணவர் பேரவையை உண்டாக்கி மாணவர்களின் உரிமைக்காகப் போராடிய அவர் இளைஞர்பேரவையொன்றை உண்டாக்க விரும்பி என்னுடன் தொடர்புகொண்டார். இளைஞர்பேரவையை உண்டாக்கியவர்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிவகுமாரன் பல அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தினார்.

"இன்று தமிழ் இனம் ஒரு திருப்புமுனையில் இருக்கிறது. தமிழ்மக்கள் மத்தியில் பல கருத்துவேறுபாடுகள் நிலவினாலும் கூட நாம் எமது தலைவர்கள் மீது நம்பிக்கைவைத்துச் செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் எமது லட்சியத்தை அடையமுடியும். இல்லையேல் நாம் சின்னாபின்னப்பட்டு எமது லட்சியத்தை அடையமுடியாத நிலை ஏற்படும்." (க)

## "தமிழ் உள்ளங்களில் என்றும் இடம்பெற்றவர்"

### டாக்டர் தர்மலிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழினத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த முதல் தியாகி திருமலை நடராசன் கடைசியாகத் தன்உயிர் நீத்த தியாகி இன்பம். இவர்களுக்கிடையில் பலர் தமிழினத்திற்காகத் தம் உயிரை நீத்துள்ள போதிலும் அவர்களுள் என்றும் நாம் நினைவு கூரும் வகையில் தமிழ் உள்ளங்களில் நிலைத்து நிற்பவன் தியாகி சிவகுமார்.

உரும்பிராயில் நடந்த அமரர் சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய யாழ். முன்னாள் மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:

தமிழாராய்ச்சிமகாநாட்டின் போது படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களைக் கண்டு உள்ளம் கொதித் தெழுந்த சிவகுமாரன் அன்று முதல் தானும் ஒரு பயங்கரவாதியாக மாறி ஆட்சியாளருக்கு எதிராகப் பல போராட்டங்களை நடாத்தினார். அதன் பயனாக பலமுறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட போதும் தனது லட்சியத்தைக் கைவிடவில்லை.

ஒரு முறை என்னைச் சந்தித்த சிவகுமாரன் சித்திரவதையின்றிச்சாவதற்குஏதாவதுமருந்துதரும்படி கேட்டார். தமிழ் இனத்தின் போராட்டத்திற்காக எந்த நேரமும் தன் உயிரை இழக்கத் தயாராக இருந்தவன் சிவகுமார். சிவகுமார் போன்ற வீர இளைஞர்கள் இன்றும் வாழுகிறார்கள். அவர்களுக்கு வழிவிட்டுக் கொடுக்கவேண்டியது முதுபெரும் தலைவர்களின் கடமையாகும். (கொ)

## நவீன...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர். நீர்வளம், நிலவளப், கனிவளம், இத்துடன் மனித சக்தியின் உயர்வளம் ஒருங்கே இணையப் பெற்ற ஒரு தேசமாக விளங்கும் சீன தேசம் தனது சோஷலிச நவீன மயத் திட்டத்தின் இலக்கை அடைவதன் மூலம் தனக்கு மட்டுமன்று முழு மனித குலத்திற்குமே பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை இன்று சீன மக்கள் கொண்டுள்ளனர். வெடிமருந்தின் உபயோகத்தையும், திசை காட்டும் கருவியையும், அச்சுக் கலையையும் மட்டுமன்றி இன்னும் பல கண்டு பிடிப்புக்களையும் உலகிற்கு வழங்கிய பழம் பெருமை கொண்ட சீனு இன்று தொழிலாளர்கள்-விவசாயிகளது தலைமையிலான சோஷலிச அமைப்பின் மூலம் மேலும் பல அளப்பரிய வழங்கல்களை உலகிற்கு வழங்க முடியும் என்றே நம்புகின்றோம்.

### மேலாதிக்க நோக்கமில்லை

சக்தி மிக்க நவீன சோஷலிச நாடாகத் தன்னை மாற்றி அமைப்பதில் முன்னேறி வரும் சீன மக்களும், சீனத் தலைவர்களும் தமது வளர்ச்சி உலக நாடுகளுக்கோ, மக்களுக்கோ ஒரு அச்சுறுத்தலாக இருக்க மாட்டாது என்ற உத்தரவாதத்தை உலக அரங்கில் கொடுத்துவருகின்றறர். "சீனு ஒரு போதும் மேலாதிக்கத்தை நாடாது" என்பதே அவ் உத்தரவாதமாகும். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாது எப்பொழுதும் மிகக் கவனத்துடன் செயல் பட்டு வரும் சீன மக்களும், சீனத் தலைவர்களும் தமது தற்போதைய உத்தரவாதங்களையும் குறிக்கோள்களையும் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்றே நம்பவேண்டும்.

மாசேதுங் அவர்களின் தலைமையின் கீழ் சீன மக்கள் விடுதலைக்காக நடத்திய புரட்சிப் போராட்டங்களும், விடுதலைக்குப் பின் அவர்கள் தமது நாட்டை சோஷலிசப் பாதையில் கட்டி எழுப்பிய நடவடிக்கைகளும் விடுதலை வேண்டி நிற்கும் உலக மக்களுக்கும் நாடுகளுக்கும் சிறந்ததோர் ஆதர்சமாகும்.

இன்று மூன்றுவது உலக யுத்த அபாயத்திற்கு எதிராகவும்; மேலாதிக்கம், ஆக்கிரமிப்பு, வல்லரசுப் போட்டி ஆகியவற்றிற்கு எதிராகவும் உலக மக்களின் பக்கம் உறுதியாக நிற்கும் ஒரு தேசமாக சீன தேசம் இருப்பது அதன் சரியான சோஷலிசத் தன்மையையே வெளிப்படுத்துகின்றது. சீன மக்களும் - நாடும் அடுத்த இருபது ஆண்டுகளில் தமது சக்திமிக்க நவீன சோஷலிச சீனம் என்ற இலக்கை அடைய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

## இசைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு இசைவிழா இன்று மாலை வழமைபோல் யாழ். திவ்விய ஜீவன சங்கமண்டபத்தில் நடைபெறும். நிகழ்ச்சிகள் பின்வருமாறு;

மாலை 4.00 - 5.00 மங்கள இசை ஈழநல்லூர், S. முத்துலக்ஷ்மி குழு. (பாட்டு) செல்விகள், ப. மிதிலா, தி. சிவகாமி, க. வாயிஷா, ச. சுபாஜினி, ச. சுரேந்தினி. (வீணை) செல்வி, விமலநாயகி சண்முகநாதன் இ. க. ம. மியூஸிக் அகடமி மாணவர்கள் (தாளவாத்தியம்). செல்விகள், குமுதினி கனகரட்ணம் சாந்தினி ஞானசேகரக் குருக்கள் (வயலின்). செல்வி, வாசுகி மகாரெத்தினம் செல்வி, மிதிலா யோகரட்ணம் (பாட்டு). செல்விகள் சௌரி கைலாசநாதக் குருக்கள், வசலா சோமசுந்தரக்குருக்கள் (வீணை) செல்வி, சிவதாரிணி சிவஞானம் (வீணை).

தலைமையுரை: திரு. ஆ. மகாலிங்கம் நிர்வாக அதிகாரி யாழ். கல்வித்திணைக்களம். திரு. S. ஜெயச்சந்திரன் (பாட்டு). திரு. A, K. கருணைகரன் (பாட்டு) திரு. V. K. குமாரசாமி (வயலின்) திரு. A. சந்தானகிருஷ்ணன் (மிருதங்கம்) 9.30 - 10.50 இ. க. ம. மியூஸிக் அகடமி மாணவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சி.


## பஸ்ஸில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றிலே சொன்னதைட போல 21-2-80 அன்று 1ம் எதிரியைக் கேட்கவில்லை?- இல்லை நான் இங்கு சொன்னவை எல்லாம் அன்று நடைபெற்றன.

2ம் எதிரி சார்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.


இதோ வந்துவிட்டன அல்கா சைக்கிள்கள்



ALKA CYCLES

இனும் பம்ப், பூட்டு, சாவி, சாவிபாக் முதலியன

விலை ரூபா 850/- மட்டுமே

வாடிக்கையாளர்களுக்கு மாதாந்தக் கட்டுப்பணத்திற்கு கொடுக்கப்படும்.

நபிணன்ஸ் கம்பனி லிமிட்

249|C, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7650


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "சுதந்திரமான வாழ்வை அமைப்பதே எமது நோக்கம்"

## யாழ். மாவட்ட அமைச்சர் உரை

(யாழ்ப்பாணம்)

''எதிர்காலத்தில் சுதந்திரமான வாழ்வு அமைப்பதற்கும் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுப்பது தான் அரசின் ஒரே நோக்கம். எந்தக் காரியத்திலும் அரசு எடுக்கும் நடவடிக்கை இந் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கேயாகும்''

யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிப் பேசிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

'எல்லோருக்கும் வணக்கம் என்று தமிழில் கூறிவிட்டுத் தமது பேச்சை ஆரம்பித்த மாவட்ட அமைச்சர் தமிழ் மொழியில் பேச முடியாமலிருப்பதற்கு கவலைப்படுவதாகக் கூறினார்.

தற்போது தான் தமிழ் மொழி பயின்று வருவதாகவும் ஆனால் இப்படியான சபையில் பேசக் கூடியளவு படித்து முடிக்கவில்லையென்றும், அதை யிட்டுக் கவலைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட அமைச்சர் திரு. விஜயக்கோன் மேலும் கூறியதாவது:

''பாடசாலையில் படிக்கும் மாணவர்களையும், இளம் சமுதாயத்தையும் நாட்டின்சிறந்த சொத்தாக கருதுகிறோம்.

'நாட்டின்சொத்தில் பெருந் தொகை கல்விக்காகவே செலவிடுகிறோம். நாங்கள் பிரச்னைக்கிடையில் வாழும் ஒரு சமுதாயம். பிரச்னையில்லையென்றாலும் வாழ்க்கையில் சுவையில்லை. நாங்கள் பிரச்னைகளைக் கண்டு ஓடிவிடக் கூடாது. பிரச்னைகளை நன்கு ஆராய்ந்து தீர்க்க முன்வர வேண்டும்.

''சமுதாயத்தை நன்முக அமைக்கத்தான் நாம் நடவடிக்கை எடுத்துவருகிறோம். நாங்கள் எதிர்பார்க்கும் நோக்கம் நிறைவேற எல்லோரும் கடமையைச் செய்யவேண்டும். எமது அரசில், பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை இந்நாட்டை முன்னேற்றப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

''கல்வியிலுஞ்சரி, விளையாட்டிலுஞ்சரி எவ்வித வேறுபாடுகளுமின்றி ஒற்றுமையாக முன்னேறிவந்தோம். இப்படியாக வளர்ந்துவந்த சமுதாய ஒற்றுமை சில வருடங்களாக ஏற்பட்ட மாறுதலினல் குலைந்தது. இதனல் தான் நாட்டில் அபிவிருத்திக் குத் தடையேற்பட்டுள்ளது. ஆதலால் இந்நிலைமையில் வாழமுடியாது. நாட்டின் நன்மைக்காக இதை நீக்க முன்வரவேண்டும்.

சிங்களவ , தமிழர், ''ஸ்லிம்கள் எல்லோரும் எவ்வித பேதமுமின்றி ஒரே சகோதரர்களாக வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவருகிறது.

கலாச்சார ரீதியில், தமிழருக்கும் சிங்களவருக்கிடையிலும் அவ்வளவு வித்தியாசம் தெரியவில்லை. நான் இங்கு பல கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் தமிழ்-சிங்கள மக்கள் சகோதரர்கள்போல் ஒற்றுமையாக வாழ்த்துகொண்டிருக்கிருர்கள்.

''அரசின் ஒரே நோக்கம் நாட்டின் எல்லாப் பிரசைகளும், ஒரேமாதிரி முன்னேற வேண்டும் என்பதுதான்.

''இந்த அரசு, ஆளுங்கட்சி உறுப்பினரின் தொகுதியைப் போன்றுதான் எதிர்க்கட்சி உறுப்பினரின் தொகுதிகளையும் கவனித்துவருகிறது.

பிரதி கல்விஅமைச்சர்தொகுதிக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்ட தோ அதே போன்று தான் யாழ் எம்.பி. க்கள் தொகுதிகளுக்கும் ஒதுக்கப் பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கு நாம் ஒன்றுபட்டுழைக்கவேண்டும்.

''பௌத்த சமயமும், இந்து சமயமும், புனர்ஜென்மத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. பௌத்த சமயத்தின்படி, தான் கடந்த பிறப்பில் ஒரு தமிழனக பிறந்திருக்கலாம் அடுத்தபிறபிலும் ஒரு தமிழனகப் பிறக்கலாம். இதுஎல்லோருக்கும் ஒரு பொதுவானகருத்தாகும். நாங்கள் எல்லோரும் ஒரே மனித சமிதாயம் என்பதை மறக்கக் கூடாது.

திருமதி.ஆர்.ஆர் நவரத்னம் பேராசிரியர் டாக்டர் டபிள்யு எல். ஜெயசிங்கம், டாக்டர் கொடிதுவக்கு ஆகியோரும் பேசினர்கள். (சு-கு)

# "முதலுதவிசிகிச்சைஇல்லாத கல்வி பூரணத்துவம்பெருது"

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் விழாவில் பேச்சு

(பண்டத்தரிப்பு)

''நம்நாட்டில் விபத்து மரணங்கள் அதிகரித்துவரும் இக் கால கட்டத்தில் உரிய நேரத்தில் தகுந்த முதலுதவிச் சிகிச்சைகளை அளிப்பதன்மூலம் பெரும்பாலானவர்களின் உயிர்களைக் காப்பாற்றமுடியும். பாடசாலைகளில் கல்வி பயிலும் போது முதலுதவிச் சிகிச்சை முறைகளையும் மாணவர்கள் பயின்ருல் தங்கள் குடும்பத்திற்கு மாத்திரமல்ல சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெரும் தொண்டாற்றமுடியும். முதலுதவிச் சிகிச்சை முறைகளை பயிலாத மாணவர்கள் தங்களின் கல்வி பூரணத்துவம் வாய்ந்த கல்வி என்று கருத முடியாது''

இவ்வாறு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத் தலைவர் திரு. மலோறி விஜயசேகரா யாழ்.மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பொன் விழா தொடர்பான நிகழ்ச்சிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்லூரி மாணவிகளால் முதலுதவிச் செய்கை முறைகள் செய்து காண்பிக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் படையின் கமாண்டர் டாக்டர் ஒஸ்வின் பெர்னண்டோ உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''யாழ். மாவட்டத்தில் விவசாயிகளின் வீடுகளில் கிருமிநாசினிகள் விவசாயத் தேவைக்காக வாங்கி வைக்கப்படுகின்றன. இக்கிருமிநாசினிகளை தவறுதலாக சிறுபிள்ளைகளோ அல்லது மற்றவர்களோ குடித்துவிட்டால் அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும். கிருமிநாசினி குடித்தவுடன் செய்யவேண்டிய முதலுதவிச் சிகிச்சைமுறைகளை சகலரும் அறிந்து வைத்திருந்தால் பல உயிர்கள் அநியாயமாகப் பலியாவதை பாதுகாக்கமுடியும். மின்சாரத்தால் தாக்கப்பட்டு அதிர்ச்சியடைதல், தீயினல் தாக்கப்படுதல், மற்றும் வீதி விபத்துகள் ஆகியவற்றில் சிக்குபவர்களுக்கு உடனடியாக தகுந்த முதலுதவிச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டால் அவர்களின் உயிர்களை காப்பாற்ற முடியும்.

''யாழ். மாவட்டத்தில் எமது படைப்பிரிவு பொன் விழாக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எமது இயக்கத்தின் சேவைகளை கடந்த 50 ஆண்டுகளாக பல இடங்களிலும் விஸ்தரித்து தொண்டாற்றிவரும் முகாந்திரம் ஈ. பி. இராசையாவின் சேவைகளை நாம் நினைவுகூரவேண்டும். அத்துடன் யாழ். மாவட்ட ஆணையாளராக பதவியேற்று துடிப்புடன் சேவையாற்றிவரும் இளைஞரான டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பியின் சேவைகள் எமது இயக்கத்திற்கு மெருகூட்டும் என்று எதிர்பார்க்கிறேம்''

முகாந்திரம் திரு. ஈ. பி. இராசையா, யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, திருமதி உருத்திரா கந்தசாமி ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்கள். பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தில் முதலுதவிப் பயிற்சிபெற்ற 24 மாணவிகளுக்கு சான்றிதழ்கள் படைத் தலைவர் திரு. மலோறி விஜயசேகராவினல் வழங்கப்பட்டன.

# "இவர்களை நிரந்தரமாக்குக"

(பலாலி)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க தெல்லிப்பளைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் திரு. வி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் பணியாளர்கள் இறக்கநேரிடின் சங்கத்தால் உதவு பணமாக 250 ரூபாவுக்கு குறையாத தொகை கொடுபட வேண்டும் என்றும் தற்காலிக பணியாளர்கள் கூடியவிரைவில் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் கிளைமுகாமையாளர்களை சங்கத்தலைமைப் பீடம் அழைத்து கருத்தரங்கொன்றை வைப்பதன் மூலம் அவர்களது பிரச்சினைகள் பல தீர்க்கப்படக் கூடியதாகவிருக்கும். என்ற கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டது.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற அக்கூட்டத்திற்கு தாய்ச்சங்கத்தில் இருந்து திரு.எஸ். இராசேந்திரம் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. செ. கனகநாயகம், உப தலைவர் திரு. ச. திருஞானசம்பந்தமூர்த்தி, செயலாளர்; திரு. வெ. பத்திநாதர், உப செயலாளர்: திரு. ச. குமாரசாமி, தனதிகாரி: திரு. சி. நாகேந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள்: இ. சிறிகாந்தமூர்த்தி, ச, இரஞ்சிதநாதன், அ. செல்வரத்தினம், ந. கிருஷ்ணமூர்த்தி, செல்வி ஜெயந்திராதேவி மார்க்கண்டு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புலோப்பளை கொலைவழக்கு:

# "நெஞ்சில் இரத்தம்வடிய அண்ணன் ஓடி வந்தார்"

## தங்கை சாட்சியம்

(பச்சிலைப்பள்ளி)

இறந்தவர் ஓடிவரும் போது, இறந்தவரது நெஞ்சிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவர் அணிந்திருந்த 4 முள வேட்டி இரத்தத்திலைல் தோய்ந்திருந்தது. ஓடிவந்தவர் கடைக்கும் வீட்டுக்கும் இடையில் முற்றத்தில் வீழ்ந்து விட்டார்.

மேற்கண்டவாறு புலோப்பளை கொலை வழக்கில் இறந்தவரது சகோதரியான பாடசாலை மாணவி செல்வி. சா. மங்களாம்பிகை (வயது 12) சாட்சியமளிக்கும் போது கூறினர்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்ற நீதிபதி திரு. கே. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் பிராமண இளைஞன சா.குகபாலசர்மா என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த பி. மரியாம்பிள்ளை, எவ். பெர்னண்டோ ஆகிய இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சா. மங்களாம்பிகை தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது கூறியதாவது: இச்சம்பவம் நடந்த நேரம் நானும், எனது பேரரான சுப்பிரமணிய ஐயரும், இளைய சகோதரரான இந்திரபால சர்மாவும் வீட்டில் இருந்தோம். எனது தாயும், தந்தையும் அந்நேரத்தில் 200 யார் தூரத்திலுள்ள ஒரு அயலவருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். இறந்தவரான எனது அண்ணனுடைய கடை எமதுவளவுக்குள்ளேயே40யார் தூரத்தில் இருக்கிறது. இச்சம்பவம் நடந்த நேரத்தில் இறந்தவர் கடையிலேயே இருந்தார்.

நான் வீட்டுக்கு விளக்கு ஏற்றிவிட்டு இருந்தபோது இறந்தவர் ''ஐயோ அம்மா குத்திப் போட்டாங்கள்''எனக் குளறிக் கொண்டு கடையில் இருந்து வீட்டை நோக்கி ஓடி வந்தார். ஆனல் அவர் வீட்டுக்கு உள்ளே வருவதற்கு முன் கடைக்கும் வீட்டுக்கும் இடையில் முற்றத்தில் வீழ்ந்தார். இறந்தவர் ஓடிவரும் போது கையில் சைக்கிளுக்குக் காற்று அடிக்கும் ''பம்''மும், ரோச் லைட்டும் கொண்டு வந்தார்.

### நெஞ்சிலிருந்து இரத்தம் வடிய...

இறந்தவர் ஓடி வரும் போது இறந்தவரது நெஞ்சிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அப்போது அவர் நான்கு முழ வேட்டி அணிந்திருந்தார். வேட்டி இரத்தத்திலைல் நனைந்திருந்தது. இறந்தவரது நெஞ்சு எல்லாம் இரத்தமாக இருந்தது. யார் குத்தியது எனக் கூறவில்லை. நாங்களும் அதைப்பற்றிக் கேட்கவுமில்லை.

நாங்கள் வழமையாக மாலை 6 மணிககு வீட்டுக்கு விளக்கு ஏற்றுவோம். அப்போது வானம் நன்முக வெளிப்பாக இருந்தது.

### அழுதபடி ஓடினேன்

இறந்தவர் ஓடிவந்து விழுந்தவுடன், அயலவரின் வீட்டுக்குப் போயிருந்த எனது தாயையும், தந்தையையும் கூட்டிவர அழுது கொண்டு ஓடினேன். அதற்கு முன் ஒரு பாய் எடுத்துக் கொண்டுவந்து, இறந்தவரின் தலையை அதன் மேல் தூக்கி வைத்து விட்டுச் சென்றேன். அங்கே அம்மாவிடம், ''அண்ணவைக் குத்திப் போட்டாங்கள், ஓடி வாருங்கள்'' எனக் கூறியபோது எனது தகப்பனும், தாயும் வீட்டுக்கு ஓடி வந்தார்கள். அம்மா அழுத சத்தத்திற்கு வீதியில் நின்றவர்களும் வந்தார்கள். நான் அம்மாவிடம் சென்ற போது எனது பேரரான சுப்பிரமணிய ஐயரே இறந்தவருடன் நின்றார். திருமபி வரும போது மரியநாயகம் என்பவரும் நின்றார்.

### மடியில் தூக்கி வைத்தார்

அம்மா இறந்தவரை மடியில் தூக்கி வைத்து, சயிக்கிள் ''பம்'' எப்படி இங்கே வந்தது? என அழுதுகொண்டு கேட்டா. ''யாரோ குத்திப் போட்டாங்கள்'' என மரியநாயகம் அதற்குக் கூறினர். மரியநாயகம் குத்தியவரது பெயரைக் குறிப்பிடவில்லை. மரியநாயகத்தின் வீடு எங்களது வீட்டிலிருந்து 150 யார் தூரத்தில் உள்ளது. எங்களது வீட்டுக்கு ஆகக் கிட்டிய வீடு எலியஸ் என்பவரின் வீடாகும். மரியநாயகத்தை கார் பிடிக்க அனுப்பினர்கள். அதன் பின் சிதம்பரப்பிள்ளை என்பவரையும் அம்மா கார் பிடிக்க அனுப்பினர். சிதம்பரப்பிள்ளை, அம்மா வந்த பின்னர் தான் வந்தார். அவரது வீடு எங்களது வீட்டிலிருந்து கால் மைல் தூரத்தில் உள்ளது. சிதம்பரப்பிள்ளை கார் பிடித்து வந்தவுடன் இறந்தவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ருர்கள்.

பளைப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. த. அருச்சுனன் சாட்சியத்தினை நெறிப்படுத்தினர். பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. சி. விஜயசூரியா வழக்கை நடத்தினர். எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் ஆஜரானர். (சு)

# 200ரூபாஅபராதம்

(பண்டத்தரிப்பு)

சட்டவிரோதமான முறையில் தங்கள்வீடுகளில் வைத்து சாராயம் விற்பனைசெய்ததாக குற்றம் சாட்டி தொல்புரத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களை சங்கானைப் பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி தலா 200அபராதம்விதித்தார். சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு.டி.பிரேமதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டிதொல்புரத்திலுள்ள என்.சங்கரப்பிள்ளை எம்.சின்னத்தம்பி ஆகியோரின் வீடுகளில் திடீர் சோதனைநடாத்திய போது அங்குசாராயம் லைசென்ஸ் இன்றிசட்ட விரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் இருவரையும் பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு.இ ஆர்.இராசசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்த போது இருவருக்கும் தலா 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# வலைத்திருட்டு: இருவருக்கு அபராதம்

(பண்டத்தரிப்பு)

மீன்பிடி வலைகளைத் திருடியதாக குற்றம் சாட்டி சங்கானை பொலிசாரினல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருவருக்கும் மல்லாகம் மாவட்ட நீதிபதி தலா 500 ரூபா அபராதம் விதித்ததுடன் இரண்டு வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர். மாதகலைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை, மாரிசன் கூடலைச் சேர்ந்த பிரான்சிஸ் ஆகிய இருவர் மீதும் சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதிமிக்க வலைகளை திருடியதாக குற்றம் சாட்டி சங்கானை பொலிசார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். இத்திருட்டில் சம்பந்தப்பட்ட இன்னுமொருவருக்கு தீர்ப்பு வழங்குவதை நீதிபதி செப்டம்பர் 7ம் திகதிக்குஒத்திவைத்தார். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து அறுபதுவரை


## யாழ்பல்கலைக்கழக புதிய தவணை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடமும், விஞ்ஞானபீடமும் புதிய தவணைக்காக இம்மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகின்றது.


**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த
ராமன்தேடியசீதை

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
திருவருள்

**ஸ்ரீதர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, மாலினி பொன்சேகா, ஸ்ரீதேவி, ஜெய்சித்ரா
பைலட் பிரேம்நாத்
3-10-80முதல்
எம். ஜி. ஆர். - லதா நடித்த
மீனவ நண்பன்

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கார்த்திகைத்தீபம்
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
THE DEEP

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—நிர்மலா
எடுப்பார் கைப்பிள்ளை

**WINDSOR** (JAFFNA)
IT'S EVIL..... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a. m, 2-00, 4-30, & 7-00 p. m only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
In
"I DON'T WANT TO BE BORN"
Color Adults only

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
வெற்றிவிழாக் கொண்டாடும் 3-வது மாதம்!
நீயா?
"வெள்ளி விழா" வண்ணச்சித்திரம்
விரைவில் திசைமாறிய பறவைகள் கலர்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)


மாவட்ட அபிவிருத்திச் சபை:

# "மக்கள் திருப்தி அதன் நடைமுறையில் தங்கியுள்ளது"

-கதிரவேலுப்பிள்ளை எம். பி.

(யாழ்ப்பாணம்)
"மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றிப் பலதரப்பட்ட கருத்துவேறுபாடுகள் நிலவி வருகின்றன. அதுபற்றிப் பல விவாதங்களும் நடைபெற்று வருகின்றன. இவற்றினால் மக்களின் மனத்தைத் திருப்திப்படுத்திவிட முடியாது. மாவட்ட அபிவிருத்திச்சபையின் நடைமுறையைப் பொறுத்துத்தான் மக்கள் திருப்தியடைவார்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாரப்பத்திரிகையான "உதயசூரியன்" பத்திரிகை வெளியீட்டுவிழாவில் உரை நிகழ்த்திய கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

விடுதலையைப் பற்றிப் பலர் பலகோணத்தில் சிந்திப்பார்கள், விமர்சிப்பார்கள். அதைப்பற்றி நாம் சிந்திக்காது எமது இயக்கத்தின் கொள்கையை நாம் வெளிப்படுத்த வேண்டும்"

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"மாவட்டசபைக்கும் அபிவிருத்திச்சபைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அதை நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். கூட்டணியில் பதவி கிடைக்காத ஒரு சிலர் தமது சுயநலத்திற்காக மாவட்டஅபிவிருத்திச் சபைக்கு எதிராக பிரச்சாரம்செய்து வருகிறார்கள். நாட்டையும், தமிழ்இனத்தையும் கூட்டணியினர் காட்டிக்கொடுத்துவிட்டார்களெனப் பிரச்சாரம் செய்கிறார்கள். நாம் இது வரை எவரையும் காட்டிக் கொடுக்கவில்லை; எமது கொள்கையை விட்டுக்கொடுக்கவும் இல்லை; விட்டுக்கொடுக்கப் போவதுமில்லை. தந்தை செல்வா காலத்திலிருந்து இன்றுவரை நாம் அபிவிருத்தியை எதிர்க்கவில்லை. எமது பிரதேசம் அபிருத்தியடைய வேண்டும் என்பதே எமது பேரவா. (கொ-அ)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 15- ம் திகதி
(புதன்கிழமை)
(1 - 10 - 1980)

மேடம்: இளமைநினைவுகள் நிழலாட்டம்போடும். காதல் கலை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவர். பாலுணர்ச்சி மேலிடும்.

இடபம்: உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றும். தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மிதுனம்: பணவிவகாரத்தில் அதிக கவனம்செலுத்தவும். தொழில்துறையில் சிக்கல்கள் தோன்றலாம். எந்தவிடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும். நாவடக்கம் நன்று.

கடகம்: குடும்பநலனில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவுமுறைகளில் அபிவிருத்தி காணப்படும். அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். வசீகரப்பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

சிங்கம்- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லை அதிகரிக்கும். சகோதரவழியால் சஞ்சலம் தோன்றும். இறைநம்பிக்கை நன்று.

கன்னி: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பொருள்வரவுக்கும் இடமுண்டு. அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். சிறப்பான தினம்.

துலாம்: உள்ளத்தில்உவகை துள்ளும். நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள். புத்திரர்களால் சிறப்பும் உண்டு. தேடியதும் கிடைக்கும். வெற்றித்தினம்.

விருட்சிகம்: உங்கள் நடவடிக்கை அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் தடைப்படுவதற்கு சதி பெறலாம். அகாலபோசனத்தின்மூலம் வயிற்றுக்கோளாறும் ஏற்படலாம்.

தனுசு: மனைவாழ்வில்மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். வருமானத்தில் உயர்ச்சியும் கிடைக்கும். புதுமனை கட்டுவதற்குக் கூடச் சிலர் ஆலோசிக்கலாம்.

மகரம்: அரசபயத்திற்கும் இடமுண்டு. வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம்செலுத்தவும்.

கும்பம்- பெரியவர்ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் உண்டு இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

மீனம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும்கிடைக்கும். தூரதேசபிரயாணத்திற்கும் நிறைவேற்றப்படலாம்.

ஜோதிடக்கலாநிதி
க. வேலுப்பிள்ளை

## காணி அமைச்சரின் வடபகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)
காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிசநாயக்கா நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளைக் காலை 9 மணிக்கு ஹெலிக்கொப்டர் விமான மூலம் கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்தை வந்தடையும் அமைச்சருக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது, அங்கிருந்து அமைச்சர் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெறும் விசேட பூசையில் கலந்து கொள்வார். அதைத் தொடர்ந்து, சேவிஸ் வீதியில் அமைந்துள்ள சர்வோதயம் இரணைமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஆகிறவற்றைப் பார்வையிடுவார்.

மாலை கண்டாவளையிலுள்ள 3000 ஏக்கர் நெல்வயல்களுக்குப் புதிய நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதுடன் இரவு கிளிநொச்சி நகர மண்டபத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அமைச்சர் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்.

இம் மாதம் 5ம் தேதி காலை யாழ். செயலகத்தில் நடைபெறும் விவசாய குழுக் மகாநாட்டிலும் அமைச்சர் கலந்துகொள்ளுவார். (கொ)

## "கலையரசுக்கு இன்னும் பல பட்டங்கள் வேண்டும்"

### பாராட்டுவிழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)
'கலையரசு சொர்ணலிங்கத்துக்கு தமிழினம் பல பட்டங்களை வழங்கவேண்டியிருக்கிறது. அவருக்குப் பட்டங்கள் வழங்க அவர் இன்னும் பல காலம் நீண்ட ஆயுளுடன் வாழ்வார். '

இவ்வாறு தமிழ் நாடகத் தயாரிப்பாளரும், கதாசிரியருமான திரு. குழந்தைவேலு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கலையரசு சொர்ணலிங்கத்திற்கான பாராட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

பாராட்டு விழாவை இலங்கைக் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம் ஏற்பாடுசெய்திருந்தது.

விழாவிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்விரிவுரையாளரும், கலை இலக்கிய நண்பர்கள்ஒன்றியத் தலைவருமான திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார்.

திரு. குழந்தைவேலு மேலும் பேசுகையில், கலையரசு பழகுவதற்கு இனியவர், அவர் என்றும் இளமைத் துடிப்போடு விளங்குகிறார். தமிழ் நாடகத்துறைக்கு, 93 வயதிலும் பல பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்' என்றார்.

கலையரசு சொர்ணலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசகையில் 'ஷேக்ஸ்பியர் தனி மனிதனுடைய வாழ்வை ஏழு பருவங்களாக வகுத்துள்ளார். நான் அவர் வகுத்த இறுதிப் பகுதியில் வாழ்கிறேன். இளம் கலைஞர்கள் தொடர்ந்து உற்சாகத்துடன், பணிபுரிய வேண்டும். எதிர்காலம் ஒளிமயமானது' என்றார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (கு)

## நகை திருட்டு

(மன்னார்)
20 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 18 சவரன் எடையுடைய தங்க நகைகளை வீட்டில் நகைப்பெட்டியில் வைத்திருந்ததாகவும் சம்பவ தினம் நகைப்பெட்டியைத் திறந்து பார்த்தபோது தங்கநகைகளைக் காணவில்லையென்றும் மன்னார் பெரியகடை வட்டார வீட்டுப் பெண்மணி ஒருவர் மன்னார் பொலிசில் புகார் செய்துள்ளார். இது சம்பந்தமாக மன்னார் பொலிசார் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஈ)

## ஆணையாளர் நியமனம்

(மன்னார்)
மன்னார் காணி அதிகாரி திரு. ஏ. பாஸ்கரதாஸ் விடத்தல் தீவு கிராம சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முசலி கிராமசபையின் விசேடஆணையாளராக ஜனாப் எம். லுக்மான் நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரிகாலத் தேவி வழிபாடு

| | |
|---|---|
| தேவி தோத்திரத் திரட்டு | 1-50 |
| நவராத்திரிப் பாமாலை | 1-00 |
| சகலகலாவல்லி மாலை | 50 |
| அபிராமி மகிமை | 2-50 |
| அபிராமியந்தாதி | 1-75 |
| அபிராமி அம்மை பதிகம் | 75 |
| மாரியம்மன் தாலாட்டு | 1-75 |

**காந்தளகம்**
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


## க. பொ. த. மாணவர் கஷ்டம்

(அரியாலை)

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தபால் காரியாலயங்களில் மாணவர்களுக்கான அறிமுக அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இல்லாத காரணத்தால் கல்லூரி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1980-ம் ஆண்டு மார்கழி மாத கல்விப் பொதுத் தராதரப் பொதுப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவ மாணவிகளே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். [அ]

## ஆஸ்பத்திரியில் சேர். ஜோன்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் திரு. சேர். ஜோன் கொத்தலாவலை (83 வயது) சுகயீனம் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாரடைப்பு நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இவரை நேற்றுக்காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சென்று பார்வையிட்டார். (இ)

## "நமது பிள்ளைகள் அந்நியவாழ்க்கை முறையை பின்பற்றுவது அறியாமை"

### வடமாநிலக் கல்வியதிபதி கவலை

(யாழ்ப்பாணம்)

"உலகத்தில் நாம் பெரும் பாரம் பரிய செல்வத்தைக் கொண்டுள்ளோம் இந்தப் பாரம் பரியத்தைக் கொண்டுள்ள பிள்ளைகள் இங்கு வந்து சுதந்திரமாக நடமாடும் வெளிநாட்டவரின் வாழ்க்கை முறையை அறியாமையால் பின்பற்றிப் பிழையான வழியில் செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது கவலைக்குரியதாகும்."

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடந்த மாணவர் தலைவர்கள் கருத்தரங்கில் உரையாற்றிய வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ.பி. விஜயக்கோன் தலைமையில் நடந்த கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த பாடசாலைகளின் மாணவர் தலைவர்கள் கலந்து கொண்டனர். கல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது

யாழ். மாணவர் தலைவர்களை ஒருங்கே அழைத்து அவர்கள் பிரச்னை பற்றியாராய முற்பட்டது இதுவே முதல் தடவையாகும். பிரதிக்கல்வி அமைச்சருடன் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. விஜயக்கோன் யாழ்ப்பாண மாணவர் பிரச்னை பற்றிக் கலந்துரையாடி இந்தக் கருத்தரங்கின் அவசியம் பற்றித் தெரிவித்தார். இதனால் இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்தேன்.

"கல்வித்திணைக்களத்தில் பணியாற்றியவர்கள் மாணவர் பிரச்னை இருப்பதாக உணரவும் இல்லை அதனைத் தீர்த்து வைக்கவும் முன்வரவில்லை. மாவட்டஅமைச்சர்தான் மாணவர் பிரச்னைபற்றி நன்கு உணர்ந்து பிரச்னையை தீர்த்து வைக்க முன் வந்துள்ளார்.

"பெற்றோர்களினதும் நாட்டுத் தலைவர்களினதும் மனதில் இடம் பெற்றுள்ள விடயம் இளைஞர் பற்றிய பிரச்னை தான். காலை நித்திரை விட்டு எழுந்தவுடன் பிள்ளைகள் நிலை என்ன? ப்படி வழிகாட்ட முடியும் திர்காலம் எப்படி இருக்கும் என்ற கேள்விகள் தான் மனதை உறுத்திக் கொண்டிருக்கின்றன.

"கல்வித்திட்டத்தை மாற்றி அமைத்துக்கொள்ளத் தவறினால் பிள்ளைகளின் நிகழ்காலமும் எதிர்காலமும் கஷ்டத்தில் முடியும்.

இப்படியான கருத்தரங்குகள் மூலம் மாணவர் தங்கள் பிரச்னை தெரிவிப்பதன் மூலம் சிந்தனையை மாற்றியமைத்து சிறந்த கல்வி அளிக்க முடியும். இக்கருத்தரங்கு முதலும் கடைசியுமாக இருக்கமாட்டாது- (அ)

## "ஆசிரியர் மதிப்பு இன்று குறைந்துவருகிறது"

### பிரதி அமைச்சர் கவலை

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியர்கள், கல்வியுடன் நல்லொழுக்கத்தையும் மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நல்ல கல்விமான்களையும், ஒழுக்கசீலர்களையும் உருவாக்க முடியும்"

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட இளைப்பாறிய ஆசிரியர் சேமநல பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிஅமைச்சர் திரு. சமரவீரவீரவன்னி மேற்கண்டவாறு கூறினார். யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் மேற்படி பாராட்டுவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார், திரு. அமிர்தலிங்கத்துடன் பிரதி அமைச்சர் திரு. சமரவீரவீரவன்னி, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு.யோகேந்திரா துரைசுவாமி, வடபிரந்தியக் கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவ மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எனது பெற்றோரும் ஆசிரியர்களும் என்னை நல்ல வழியில் நடத்திச் சென்றதால் தான் நான் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன். இன்றைய மக்கள் நல்ல நிலையை அடைந்துள்ளார்கள் என்றால் அதற்குக் காரணம் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தான். இன்று பாடசாலைகளிலும் வெளியிலும்கூட ஆசிரியர்களின் மதிப்புக் குறைந்து வருகிறது. அதை நினைக்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. (கொ)

## யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

79ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கும். 80ம் ஆண்டு திட்டமிடப்பட்ட வேலைகளைச் செய்வதற்கும், உரியநிதி, எல்லாத் திணைக்களங்களுக்கும் கிடைத்துள்ளதனால் அபிவிருத்தி வேலைகளைக் கால தாமதமின்றி மேற்கொள்ளுமாறு பணிப்புரையில் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி வேலைகளைப் பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் பிரதி மாதமும் இருதடவைகள் திட்டமிடல் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பு துறைமுகத்திலிருந்து 4 லட்சம்ரூபா பெறுமதியான பொருட்கள் கடத்த முயற்சி

### மூவர் கைது; சுங்க அதிகாரி விசாரணை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கடத்தி வர மேற்கொள்ளப்பட்ட முயற்சியை துறைமுகப் பொலிசார் முறியடித்தனர்.

சுங்க அதிகாரிகளுக்குத் தவறான தகவல்களைக் கொடுத்துவிட்டு அவர்களின் அனுமதியின்றி லொறி ஒன்றின் மூலம் துறைமுகத்திற்கு வெளியே எடுத்துவரப்பட்ட 3 பெட்டிகளில் 19,068 ஆயிரம் யார் பொலியஸ்டர் துணி, சேலைகள், கார் வானொலி ஒலிபெருக்கிகள் ஆகியன இருந்தன.

இதுதொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். சுங்க இலாகா அதிகாரி ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். (இ)

## மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

சுமார் 2 மணி நேரம் நடந்த காரசார விவாதத்தின் பின் நேற்றிரவு தீர்மானம் நிறைவேறியது. (விபரம் நாளை) (க)

## கொடிகாமத்திற்கு மின்சாரம் கிடைத்தது

(நெல்லியடி)

கொடிகாமம்பிரதேசத்திற்கு இலங்கை மின்சாரசபை மின்விநியோகத்தை வழங்க ஆரம்பித்துள்ளது. சுமார் 5 லட்சம் ரூபா செலவில் சபை மின் இணைப்பு வேலைகளை மேற்கொண்டது. முதற்கட்டமாக ஆடம்பரவிழாக்கள் எதுவுமின்றி இம் மின்விநியோகம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதற்கான நிதியை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஒதுக்கீடுசெய்திருந்தார். (அ)

## சீதனக் கொடுமைக்கு 19 வயது வாலிபர் பலி! 15 வயதில் குடும்பப்பொறுப்பு!

(புலோலி)

தனது சகோதரிக்கு சீதனம் வழங்க முடியாததால் ஒருவர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டாராம். கரவெட்டியைச் சேர்ந்த நல்லையா தளையசிங்கம் (வயது 19) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணையின்போது சாட்சியமளித்த இறந்தவரின் சிறிய தாயாரான நல்லம்மா சாட்சியமளிக்கையில் "இறந்தவர் 15 வயது தொடக்கம் சுருட்டுச்சுற்றும் தொழில் மூலம் தனது குடும்பத்தைப் பராமரித்து வந்தார். இவர் தனது சகோதரியின் திருமணத்தின்போது அவருக்குச் சீதனமாக 5,000 ரூபா தருவதாகச் சொல்லியிருந்தார். ஆனால் அவரால் அப்பணத்தைக் கொடுக்க முடியாமல் இருந்தது. இதனால் அவர் மனக்கவலையடைந்து காணப்பட்டார். பின்னர் தற்கொலை செய்து கொண்டார் எனக் கேள்விப்பட்டேன்" என்றார்.

இறந்தவரின் சிறிய தகப்பனார் உட்பட இன்னும் பலர் சாட்சியமளித்தனர். இறந்தவரால் சிறிய தகப்பனாருக்கும் தாயாருக்கும் எழுதிவைக்கப்பட்ட கடிதங்கள் மரண விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டன. பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசனின் உத்தரவின்பேரில் மரண விசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். (அ)

## பிணைமனுக்கள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கில், 1ம் எதிரியின் பிணை மனு யாழ். மேல் நீதிமன்றத்தில் இம்மாதம் 7ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

பொலிஸ் சார்ஜண்ட் அன்ரன் கொலை வழக்கில், எதிரிகளின் பிணைமனு இம்மாதம் 8ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## ஈராக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈராக் — ஈரான்யுத்தத்தினால் ஆசியன் நாடுகளில் எண்ணைக் குத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அந் நாடுகளுக்குத் தேவையான முழு எண்ணையையும் வழங்க இந்தோனேஷியா முன் வந்துள்ளது. (இ)


## விளம்பரம்

ஐ. தே. க. சார்பில் மதுறுஓயாத் திட்டத்தில் சிரமதானப் பணியாற்றியவர்களுக்கு 3-10-1980 வெள்ளிக்கிழமை பி. பகல் 5மணிக்கு கௌரவ காமினி திஸநாயக்கா, பா. உ. (காணி, காணி அபிவிருத்தி—மகாவலி அபிவிருத்தி அமைச்சர்) அவர்களால் சான்றிதழ்கள் யாழ். திறந்த வெளி அரங்கில் வழங்கப்படும். சிரமதானத்தில் பங்கு கொண்டவர்கள் தமது சான்றிதழ்களை தவறாது பெற்றுக்கொள்ளவும்.

**S. V சந்திரசேகரம்,**
உபதலைவர் ஐ. தே. க. கட்சி.
(யாழ். மாவட்டம்)

30-9-80. 6963


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GE 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone. 389

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org